EBIXCASH

# எச்டிஎஃப்சி பேங்க் இபிக்ஸ்கேஷ் பிரிபெய்ட் கார்டு விண்ணப்பப் படிவம்

HDFC BANK
We understand your world

சமீபத்திய பாஸ்போர்ட் அளவு புகைப்படத்தை ஒட்டி அதன் குறுக்காக கையொப்பம் இடவும்

**விண்ணப்பதாரர் பெயர்**

* முதல் பெயர்: ____________________

நடுப் பெயர்: ____________________

குடும்பப் பெயர்: ____________________

* பிறந்த தேதி: __ __ ____

* மொபைல்: ___ __________

* தாயின் திருமணத்திற்கு முந்திய பெயர்: ____________________

* பாலினம்: ☐ ஆண் ☐ பெண் ☐ திருநங்கை

* **முகவரி** (முகவரி சான்றில் இருப்பது)

____________________

____________________

____________________

* நகரம்/பட்டணம்: ____________________

* அஞ்சல் குறிஎண்: ______

* மாநிலம்: ____________________

தேதி: __ __ ____

*வரிசை எண். ____________
(கார்டின் பின்புறம் எழுதப்பட்டுள்ளது உ—ம். SO xxxx xxxx)

மின்னஞ்சல் முகவரி: ____________________

* ஆவணங்கள்: கீழேயுள்ள ஆவணங்களைச் சமர்ப்பியுங்கள்

☐ ஆதார் எண்: ________________

☐ பேன் எண். அல்லது ஓவிடி ________________

கவனிக்கவும்: வாடிக்கையாளர்கள் அவர்களுடைய ஏடிஎம்/பிஓஎஸ்/இன்டர்நெட் பின் மற்றும் சிவிவி எண்களை ஒரு போதும் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளவோ /தெரியப்படுத்தவோ கூடாது என்று கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். ஒருவேளை அவ்வாறு செய்யப்படுமேயானால் எச்டிஎஃப்சி பேங்க் இபிக்ஸ்கேஷ் பிரிபெய்டு கார்டு தவறாகப் பயன்படுத்தப்படுவதற்கு அல்லது மோசடிக்கு இபிசேஷ்மற்றும்/அல்லது எச்டிஎஃப்சி பேங்க் லிமிடெட் அமைப்பை ஒருபோதும் பொறுப்பாக்க முடியாது. எதிர்காலப் பயன்பாட்டிற்கு ரசீதைப் பெற்று அதை பத்திரமாக வைத்திருக்கவும்.

## ஆதார் குறித்த வாடிக்கையாளர் ஒப்புதல்

**(இ—சான்றளிப்பு)**

மேலேயுள்ள ஆதார் எண் என்னுடையது, எச்டிஎஃப்சி பேங்க் & இபிக்ஸ்கேஷ் ஓப்பன் லூப் ஜெனரல் பர்பஸ் ரிலோடபுள் (GPR) கார்டு ஒன்றைப் பெற, இட்ஸ் கேஷ் கார்டு பிரைவேட் லிமிடெட் (இபிக்ஸ் கேஷ்) மூலமாக யுஐடிஏஐ அமைப்பிலிருந்து என் சொந்த தகவல் மற்றும் மக்கள் தொகை விபரங்களைப் பெற என் ஆதார் மற்றும் பையோமெட்ரிக்ஸ்/ஓடிபி விபரங்களைப் பயன்படுத்த நான் சம்மதம் அளிக்கிறேன். மேலே சொல்லப்பட்டிருக்கும் நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் இபிக்ஸ்கேஷ் என் அடையாள விவரங்களைப் பயன்படுத்தும் என்பதை நான் புரிந்து கொண்டிருக்கிறேன். யுஐடிஏஐ (சிஐடிஆர்) அமைப்புக்கு மட்டுமே இந்த நோக்கத்திற்காக அனுப்பப்படும் என் பையோமெட்ரிக்ஸ் / ஓடிபி மறைகுறியீடாக்கப்பட்டுள்ளது, அது சேமிக்கப்படாது / பகிர்ந்துகொள்ளப்படாது என்பதை நான் புரிந்து கொண்டிருக்கிறேன்.

**(இயல் ஆதார்)**

மேலேயுள்ள ஆதார் எண் என்னுடையது. எச்டிஎஃப்சி பேங்க் & இபிக்ஸ்கேஷ் ஓப்பன் லூப் ஜெனரல் பர்பஸ் ரிலோடபுள் (GPR) கார்டு ஒன்றைப் பெற, இட்ஸ் கேஷ் கார்டு பிரைவேட் லிமிடெட் (இபிக்ஸ் கேஷ்) மூலமாக என் விபரங்களுக்கு என் இயல் ஆதார் நகல் மூலமாக சான்றளிக்க நாம் சம்மதிக்கிறேன். யுஐடிஏஐ எனக்களித்திருக்கும் ஆதார் இயல் நகலைப் பெற்றுக்கொள்ள நான் சம்மதிக்கிறேன். ஆதார் நகலை வழங்கி விண்ணப்பப் படிவத்தில் கையொப்பமிடும் நோக்கத்தை நான் புரிந்து கொண்டிருக்கிறேன். என் சுய அடையாள விவரங்கள் மேலே சொல்லப்பட்டிருக்கும் நோக்கங்களுக்கு மட்டுமே இபிக்ஸ்கேஷ் பயன்படுத்தும் என்ற இபிக்ஸ்கேஷ் வாக்குமூலம் எனக்குப் புரிந்திருக்கிறது.

____________________
வாடிக்கையாளர் கையொப்பம்

## வாக்குமூலம்

எச்டிஎஃப்சி பேங்க் இபிக்ஸ் பிரிபெய்டு கார்டு பயன்பாடு குறித்த வரையறைகள் & நிபந்தனைகள் மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட பொருந்தும் இதர பிற சட்டரீதியான தேவைகள் அனைத்தையும் நான் படித்து புரிந்துகொண்டு அவைகளுக்கு நான் சம்மதிக்கிறேன். இந்த உறவுமுறைக்குப் பொருந்தும் வரையறைகள் மற்றும் நிபந்தைகளில் நிகழும் மாற்றங்கள் / அப்டேட்டுகள் அனைத்தும் இட்ஸ் கேஷ் கார்டு லிமிடெட் நிறுவனத்தின் இணையதளத்தில் www.ebixcash.com மட்டுமே அணுகி பெற முடியும், அவை என்னைக் கட்டுப்படுத்தும் என்பதை நான் புரிந்து கொண்டிருக்கிறேன். இந்த விண்ணப்பப் படிவத்தில் (மற்றும் அதனுடன் சமர்ப்பித்து குறிப்பிடப்படும் அனைத்து ஆவணங்களில்) கொடுத்திருக்கும் விவரங்கள் மற்றும் செய்திகள் அனைத்து வகையிலும் உண்மையானவை, சரியானவை, முழுமையானவை மற்றும் நடப்பிலுள்ளவை என்றும் நான் எந்த தகவலையும் மறைத்து வைத்திருக்கவில்லை என்றும் உறுதியளிக்கிறேன். நான் கொடுத்திருக்கும் விவரங்கள் வங்கியியல் நிறுவனங்கள் ஆள்கை நடைமுறை விதிமுறைகளுக்குத் தேவைப்படுபவை என்பதை நான் புரிந்து கொண்டிருக்கிறேன். இட்ஸ் கேஷ் கார்டு லிமிடெட் மற்றும்/அல்லது எச்டிஎஃப்சி பேங்க் லிமிடெட் ('எச்டிஎஃப்சி பேங்க்' / 'வங்கி') அல்லது அதன் அங்கீகாரம் பெற்ற முகவர்களுக்கு தேவைப்படும் கூடுதல் விவரங்கள் / ஆவணங்களை அவர்கள் கேட்கும் போது வழங்க பொறுப்புள்ளது என்பதை ஏற்றுக்கொள்கிறேன். இந்த விண்ணப்பப் படிவத்துடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் ஆவணங்கள் அனைத்தும் உண்மையானவை, இந்த விண்ணப்பப் படிவத்திலிருக்கும் விவரங்கள் எந்த ஒரு சட்டம், விதிகள், விதிமுறைகள் அல்லது அவ்வப்போது வெளியிடப்படும் அரசு அல்லது சட்ட ரீதியான அதிகாரங்களின் சட்டங்கள் அல்லது அறிவிப்புகள், வழிநடத்தல் குறிப்புகளுக்கு முரணானவை அல்ல. இந்த விண்ணப்பப் படிவத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் விவரங்களில் ஏதேனும் மாற்றங்கள் இருந்தால் அவற்றை தாமதிக்காமல் இட்ஸ் கேஷ் கார்டு லிமிடெட், (எச்டிஎஃப்சி பேங்க் வர்த்தகப் பிரதிநிதி), டாப் 14வது தளம், டைம்ஸ் டவர், கமலா சிட்டி, சேனாபதி பாபட் மார்க், லொயர் பரேல், மும்பை — 40013 க்குத் தெரியப்படுத்திவிடுவேன் என்றும், நான் கொடுத்திருக்கும் மற்றும் நான் கொடுக்கத் தவறியிருக்கும் / விபரம் கொடுப்பதில் ஆகும் தாமதம் ஆகியவை அடிப்படையில் இட்ஸ் கேஷ் கார்டு லிமிடெட் மற்றும் / அல்லது எச்டிஎஃப்சி பேங்க் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் மூலமாக நிகழும் இழப்புகள், செலவினங்கள், சேதாரங்கள் எதற்கும் அவர்கள் பொறுப்பாக மாட்டார்கள் என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். இந்திய ரிசர்வ் வங்கி வகுத்திருக்கும் வரம்புக்குட்பட்டு நான் இந்த கார்டைப் பயன்படுத்துவேன் என்றும், குறிப்பிட்ட வர்த்தகர்களின் புராடெக்டுகள் / சேவைகளை அவர்கள் தங்கள் இணையதளத்தில் குறிப்பிட்டிருப்பது போல் அவற்றிற்கு இணங்கி பயன்படுத்துவேன் என்றும், சட்ட விரோத நோக்கத்துடன் / நடவடிக்கைகளுக்கு இதைப் பயன்படுத்த மாட்டேன் என்பதற்கும் சம்மதிக்கிறேன். இந்த கார்டைப் பயன்படுத்தி எந்த ஒரு சட்ட விரோத / குற்றச் செயல் / பணச் சலவை நடவடிக்கைகளை மேற்கொள்ள மாட்டேன், அதில் பங்கு வகிக்க மாட்டேன். இட்ஸ் கேஷ் கார்டு லிமிடெட் மற்றும் / அல்லது எச்டிஎஃப்சி பேங்க் இந்த விண்ணப்பத்தை எந்த ஒரு காரணமும் கூறாமல் அல்லது என்னுடன் தொடர்பு கொள்ளாமல் நிராகரிக்கும் உரிமை பெற்றிருப்பார்கள் என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். எச்டிஎஃப்சி பேங்கிற்குத் தேவைப்படுவது போன்ற கேஒய்சி ஆவணங்களை நான் வழங்காதிருக்கும் போது இட்ஸ் கேஷ் கார்டு லிமிடெட் மற்றும் / அல்லது எச்டிஎஃப்சி பேங்க் உரிய நடவடிக்கை எடுக்க முடியும் என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். விண்ணப்பப் படிவங்கள் மற்றும் அதனுடன் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள், புகைப்படங்கள் உட்பட அனைத்தையும் எச்டிஎஃப்சி பேங்க் தன்னிடம் வைத்திருக்கும் உரிமை பெற்றிருக்கும், அவை எனக்குத் திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது என்பதை நான் புரிந்து கொண்டு ஏற்றுக்கொள்கிறேன். பரிசீலிக்கப்பட்ட விபரங்கள்/தரவுகள் / அவை சம்பந்தப்பட்ட புராடெக்டுகள் விபரங்களை மற்ற வங்கிகள் / நிதி நிறுவனங்கள் / கடன் வழங்குபவர்கள் / சட்ட ரீதியான மற்றும் ஒழுங்குமுறை அதிகாரங்களுக்கு இட்ஸ் கேஷ் கார்டு லிமிடெட் மற்றும் / அல்லது எச்டிஎஃப்சி பேங்க் வழங்கும் போது அதற்கு அவர்களைப் பொறுப்பாக்க மாட்டேன்.

என் சொந்த தரவுகள், மற்றும் முக்கிய செய்திகள், ஆவணங்கள், கேஒய்சி சம்பந்தப்பட்ட தரவுகள், நிதிநிலை விவரங்கள் மற்றும் என்னை / எங்களைப் பற்றிய வேறு சில செய்திகள், அல்லது வங்கி இந்த நோக்கத்திற்காக சரி என்று கருதும் அனைத்தையும் (தொகுப்பாக 'செய்திகள்" என்று அறியப்படும்) செய்யவும் அவற்றில் ஏதேனும் ஒன்றை, கீழேயுள்ளவாறு, மேற்கொள்ள நான் / நாங்கள்வங்கிக்கு தானாகவோ அல்லது அதற்கு சேவை அளிப்பவர்கள் மூலமாக, தானியங்கி முறையிலோ அல்லது வேறு வகையிலோ நடவடிக்கைகளை மேற்கொள்ள சம்மதிக்கிறேன் / சம்மதிக்கிறோம்.

(1) என்னிடம் இருந்து நேரடியாக, அல்லது இயல் முறையில் அல்லது கிரிடிட் இன்ஃபர்மேஷன் நிறுவனங்கள் இணையதளங்கள், தரவு, கோப்புகள் உள்ளிட்ட ஆன்லைன் வளங்களிலிருந்து (அவை பப்ளிகானவையாக இருந்தாலும் இல்லாவிட்டாலும்) அதன் ஆன்லைன் தளங்களிலிருந்தும் பெறலாம், இந்த விவரங்களை சரி பார்க்கவும் துல்லியத்தை உறுதி செய்யவும், போதுமானவை என்று பார்க்கவும் ஆன்லைன் தளங்களிலிருந்தும், ஆட்களிடமிருந்தும், டேட்டாபேஸ்களிலிருந்தும் சரி பார்த்துக் கொள்ளலாம்; இவ்வாறு ஆன்லைன் தகவல்களை சேகரிக்கவும் சரி பார்க்கவும் என்னுடைய லாகின் மற்றும் பாஸ்வேர்ட் விபரங்களை அந்த ஆன்லைன் தளங்களில் பயன்படுத்தலாம்; இது போன்ற சேகரங்கள், சரிபார்த்தல், அணுகல் எனக்குத் தெரிந்தும் தெரியாமலும் செய்யலாம்;

(2) இவ்வாறு பெறப்பட்ட தகவல்களைச் சேமித்து வைத்தல், அட்டவணை படுத்துதல், தொகுத்தல், மறுவெளியீடு செய்தல், நகல் எடுத்தல் பயன்படுத்துதல், தொகுத்து உருவாக்குதல் ஆகியவற்றை வங்கி கருதுவதுபோல் பயன்படுத்திக்கொள்ளலாம்;

(3) இவ்வாறு சேகரித்த விவரங்களை ஒப்பந்தம், சட்டம் அல்லது வங்கி கோரிக்கை செய்ய சான்று ஆவணங்களாகத் தேவைப்படும் காலவரை அளவில், இவற்றில் எது அதிகமோ அதுவரை, வங்கி சேமித்து வைத்திருக்கலாம்;

(4) என் விபரங்களை சேவையை அளிப்பவர்கள், ஆலோசகர்கள், கிரிடிட் இன்ஃபர்மேஷன் நிறுவனங்கள், இதர பிற வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள், துணை நிறுவனங்கள், உப நிறுவனங்கள், ஒழுங்குமுறை அதிகாரிகள், தகவல் சேகரிக்கும் முகமைகள், நீதிமன்றங்கள், நீதிமன்றங்கள் போல் செயல்படும் அதிகாரக் குழுக்கள் மற்றும் அரசு அதிகாரிகள், அல்லது வங்கி சரி என்று கருதும் நபர்கள் ஆகியவர்களுடன் ஒப்பந்தரீதியான அல்லது சட்ட விதிகளுக்கேற்ப அல்லது நியாயமான வங்கி செயல்பாடுகளுக்கு இணங்கி அல்லது சம்மதம் அளித்திருக்கும் வகையில் பகிர்ந்து கொள்ளலாம், தெரியப்படுத்தலாம்;

(5) கிரிடிட் அப்ரைசல், மோசடி கண்டுபிடித்தல், பணச்சலவை நடப்பதை தவிர்த்தல், ஒப்பந்தத்தில் ஈடுபடுதல், நேரடி விற்பனை, கிரிடிட் ஸ்கோரிங் மாடல்கள் மற்றும் வர்த்தகத் திட்டங்களை உருவாக்குதல், கண்காணித்தல், சேவை மற்றும் தயாரிப்பு பொருள்களின் தரத்தை அளவிட்டு மேம்படுத்துதல் ஆகிய நோக்கங்களுக்கு மேலே கொடுக்கப்பட்டிருக்கும் விபரங்களை என் சம்மதத்துடன் வங்கி பயன்படுத்தலாம்.

தானியங்கு முறையில் பரிசீலித்தல், தானியங்கு முறையில் தொகுத்தல் மற்றும் தானியங்கு முறையில் முடிவெடுத்தல் ஆகிய வங்கி அல்லது அதன் சார்பாக செய்யப்படும் நடவடிக்கைகளுக்கு நான்/ நாங்கள் சம்மதித்து அதற்கு உட்படுகிறோம்.

எங்கள் தகவல் விபரங்களை பயன்படுத்தி வங்கி மற்றும் அல்லது அதன் துணை நிறுவனங்கள் அவர்களுடைய வேறுபல புராடெக்டுகளை எனக்கு / எங்களுக்கு விற்பனை செய்யும் வகையில் அவ்வப்போது பயன்படுத்த நான் / நாங்கள் சம்மதம் அளிக்கிறோம்

____________________
வாடிக்கையாளர் கையொப்பம்

____________________
ஸ்டாம்ப் & அவுட்லெட் கையொப்பம்

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

**ரசீது**

வரிசை எண் _______ ____ பெறப்பட்ட தொகை: _____

தேதி: __ __ ____ அவுட்லெட் குறிஎண்: ____________

அவுட்லெட் பெயர்: ____________________ இருப்பிடம்: ____________________

____________________
அவுட்லெட் கையொப்பம்

# முக்கிய வரையறைகளும் நிபந்தனைகளும்

பேங்கிங் ரெகுலேஷன் சட்டம், 1949 கீழ் வங்கியாகச் செயல்பட உரிமம் பெற்றிருக்கும் எச்டிஎஃப்சி பேங்க் லிமிடெட், நிறுவனச் சட்டம், 1956 கீழ் கீழ் வங்கியியல் கம்பெனியாக பதிவு செய்யப்பட்டு அதன் பதிவு மற்றும் கார்ப்பரேட் அலுவலகம் இருக்கும் முகவரி எச்டிஎப்சி பேங்க் லிமிடெட், ஒன் இந்தியாபுல்ஸ் சென்டர், டவர் 2பி, 6வது தளம், 841, சேனாபதி பாபட் மார்க், லோயர் பரேல் (மே), மும்பை 400013 ('ஹெச்டிஎஃப்சி பேங்க்') உங்களுக்கு எச்டிஎஃப்சி பேங்க் இபிக்ஸ்கேஷ் பிரிபெய்டு கார்டு வழங்கியுள்ளது. இட்ஸ் கேஷ் கார்டு லிமிடெட் நிறுவனம் நிறுவனச் சட்டம், 1956 கீழ் பதிவு செய்யப்பட்டு, அதன் பதிவு அலுவலகம் த டாப், 14வது தளம், டைம்ஸ் டவர், கமலா சிட்டி, சேனாபதி பாபட் மார்க், லோயர் பரேல், மும்பை — 400013 ('இபிக்ஸ்கேஷ்') முகவரியில் உள்ளது. இபிக்ஸ்கேஷ் நிறுவனம் எச்டிஎஃப்சி பேங்க் நிறுவனத்தால் எச்டிஎஃப்சி பேங்க் இபிக்ஸ்கேஷ் பிரிபெய்டு கார்டு வர்த்தகத்தின் புரொக்ராம் மேனேஜராகவும் வர்த்தகத் தொடர்பாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளது.

**(வரையறைகள் & நிபந்தனைகள்)** இபிக்ஸ்கேஷ் / எச்டிஎஃப்சி பேங்க் மற்றும் வாடிக்கையாளர் இடையே செய்யப்பட்டிருக்கும் ஒப்பந்தத்தைத் தொடர்ந்து உங்களுக்கு (கார்டு வைத்திருப்பவர்) வழங்கப்பட்டிருக்கும் இபிக்ஸ்கேஷ்/எச்டிஎஃப்சி பேங்க் கோ—பிராண்டெட் பிரிபெய்டு கார்டு ('கார்டு') பயன்பாடு வரையறைகள் & நிபந்தனைகள் மற்றும் அதனுடன் சேர்க்கப்பட்டிருக்கும் இணைப்புகள் அல்லது அதனுடனிருக்கும் துணை ஆவணம் (ஆவணங்கள்) மற்றும் இபிக்ஸ்கேஷ் இணையதளத்தில், அதாவது www.ebixcash.com வெளியிடப்பட்டிருக்கும் வரையறைகள் & நிபந்தனைகளுக்கு (அனைத்தும் 'வரையறைகள் & நிபந்தனைகள்' என்று இனி கூறப்படும்) உட்பட்டிருக்கும். இந்த வரையறைகள் & நிபந்தனைகளை இதன் மூலம் கார்டு வைத்திருப்பவர் ஏற்றுக்கொள்கிறார், இந்த கார்டு மூலமாக ஒரு நடவடிக்கையை மேற்கொள்வதன் மூலம், அல்லது இந்த கார்டைப் பெற்றுக் கொண்டதாக எழுதிக் கொடுப்பதன் மூலம் அல்லது கார்டின் பின்புறத்தில் கையொப்பம் இடுவதன் மூலம் வரையறைகள் மற்றும் நிபந்தனைகள் அனைத்தையும் கார்டு வைத்திருப்பவர் படித்துப் புரிந்து கொண்டு இருப்பதாகவும், எந்த ஒரு நிபந்தனையும் இல்லாமல் வரையறைகளையும் நிபந்தனைகளையும் கார்டு வைத்திருப்பவர் ஏற்றுக் கொண்டிருக்கிறார் என்று கருதப்படும், இந்த கார்டை பயன்படுத்துவது சம்பந்தமாக வெளியிடப்படும் எந்த ஒரு மாற்றங்களும் / திருத்தங்களும் அதற்குரிய அறிவிப்புகள் / வழிநடத்தல் குறிப்புகள் / சுற்றறிக்கைகளை கார்டு வைத்திருப்பவர் தன் சொந்த பொறுப்பில் தெரிந்து வைத்து இருக்க சம்மதம் அளிக்கிறார். கார்டு பயன்பாடு குறித்து அவ்வப்போது வெளியிடப்படும் அறிக்கைகள் / வழிநடத்தல் குறிப்புகள் / சுற்றறிக்கைகள் குறிப்புகளுக்கு முரணாக ஒருவேளை கார்டு வைத்திருப்பவர் கார்டைப் பயன்படுத்தினால், வங்கி அதன் பொறுப்புகள் அனைத்தையும் கைவிட்டு விடும். இந்த வரையறைகள் மற்றும் நிபந்தனைகள் ஒருவேளை கார்டு வைத்திருப்பவருக்குச் சம்மதம் இல்லை என்றால் இந்த கார்டை அவர் பயன்படுத்தாமல் உடனே இபிக்ஸ்/எச்டிஎஃப்சி வங்கியிடம் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும்.

**(கார்டு விபரங்களை அணுகுதல்)**. கார்டு சம்பந்தப்பட்ட விவரங்கள், மீதமிருக்கும் தொகை ('கார்டு பேலன்ஸ்') இவைகளை www.ebixcash.com இணைய தளத்தில் லாக் இன் செய்து அல்லது வாடிக்கையாளர் சேவை மையத்துடன் கார்டின் பின்புறத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் தொலைபேசி எண்களில் மற்றும் / அல்லது மின்னஞ்சல் முகவரியில் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

**1. பயன்பாடு வரம்புகள் மற்றும் பாதுகாப்பு**

(பயன்பாடு) வழங்கப்பட்டிருக்கும் கார்டு மற்றும் அதன் பயன்பாடு அனைத்தும் எச்டிஎஃப்சி வங்கி அவ்வப்போது வெளியிடும் விதிகள் மற்றும் விதிமுறைகளுக்கு உட்பட்டிருக்கும். வர்த்தகர்களிடமிருந்து சரக்குகளையும் சேவைகளையும் பெற கார்டு வைத்திருப்பவர் அதை இந்தியாவில் இந்திய ரூபாயில் மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

(மாற்றுரிமை) எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் கார்டு வைத்திருப்பவர் இந்த கார்டை வேறு ஒருவருக்கு மாற்றிக் கொடுக்க இயலாது அல்லது உரிமை மாற்றம் செய்ய முடியாது.

(கார்டு காணாமல் போதல் அலல்து திருடப்படுதல்) ஒருவேளை இந்த கார்டு அல்லது அதன் பின் காணாமல் போனால் திருடப்பட்டால் அல்லது தவறாக பயன்படுத்தப்பட்டிருந்தால், தயவுசெய்து உடனே வாடிக்கையாளர் சேவை மையத்துடன் ('வாடிக்கையாளர் சேவை மையம்') கார்டின் பின்புறத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் தொலைபேசி எண்கள் மூலமாக தொடர்பு கொள்ளவும். கார்டின் பின் நம்பரை நீங்கள் நினைவில் வைத்துக்கொண்டு பின் மெயிலரை உடனே அழித்துவிட வேண்டும். கார்டு தவறாக பயன்படுத்தப் பட்ட தகவல் அளித்த 24 மணி நேரத்திற்குள் கார்டு பயன்பாடு முடக்கப்பட்டு விடும், உங்கள் பண இழப்பு அபாயங்களைப் பாதுகாக்கும் பொறுப்பு நீங்கள் கார்டு இழப்பு அறிவித்த நேரத்திலிருந்து ஆரம்பமாகும். இபிக்ஸ்கேஷ் / ஹெச்டிஎஃப்சி பேங்க் அதன் சொந்த விருப்பத்தின் அடிப்படையில் மட்டுமே மற்றும் கார்டு வைத்திருப்பவரின் அடையாளச் சான்றைச் சரிபார்த்த பிறகு காணாமல் போன கார்டுக்கு பதிலாக புதிய கார்டு ஒன்றை உரிய கட்டணங்கள் வசூலித்த பிறகு வழங்கும்.

(சட்டரீதியானவை) கார்டு வைத்திருப்பவர் சட்ட விதிகளுக்கு உட்பட்டு சட்டரீதியான நோக்கங்களுக்கு மட்டுமே அதை பயன்படுத்த வேண்டும்.

(மூன்றாம் நபர் பயன்படுத்துதல்) முறை தவறிய வழிகளில் உங்கள் கார்டு பயன்படுத்தப்படுவதை தடுக்க நீங்கள் எப்பொழுதும் உங்கள் கார்டை உங்கள் சொந்த பாதுகாப்பில் வைத்திருக்க வேண்டும்.

(பொறுப்பேற்பு) கார்டு வைத்திருப்பவர் கொள்முதல் செய்யும் பொருள்கள் மற்றும் சேவைகள் குறித்த, அவைகளின் தரம், மதிப்பு, வாரன்டி, டெலிவரி தாமதம், டெலிவரி செய்யப்படாதது, பொருள் வந்து சேராரது உள்ளிட்ட விசயங்கள் சம்பந்தமான எந்த ஒரு பிரச்சினைக்கும் வங்கி அல்லது இபிக்ஸ்சேஷ் ஒருபோதும் பொறுப்பேற்காது. வழங்கப்பட்டிருக்கும் கார்டு கார்டு வைத்திருப்பவர்கள் வியாபாரிகளுக்குப் பணம் செலுத்த செய்து கொடுக்கப்பட்டிருக்கும் ஒரு வசதியே தவிர, வாங்கப்படும் பொருள் அளவு, தரம், மதிப்பு, டெலிவரி செய்யப்படுதல் அல்லது செய்யப்படாதது அவை பொருட்கள் அல்லது சேவைகள் சம்பந்தப்பட்டதாக இருந்தாலும் அதில் எழும் எந்த ஒரு பிரச்சனைக்கும் கார்டு வைத்திருப்பவர் வியாபாரியுடன் நேரடியாக தீர்த்துக் கொள்ள வேண்டும் என்பதை அவர் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

(கார்டு இறுப்பில் மாற்றங்கள்) ஒருவேளை நடவடிக்கை நிறைவேறாமல் தொகை திருப்பப்படும் போது, கார்டு கணக்கில் தொகை வரவு வைக்கப்படுமே தவிர கார்டு வைத்திருப்பவருக்கு ரொக்கம் வழங்கப்பட மாட்டாது. வியாபாரி இவ்வாறு தொகையைத் திருப்பிச் செலுத்தும் போது விதிக்கும் கட்டணங்களை இபிக்ஸ்கேஷ்/எச்டிஎஃப்சி வங்கி பொருந்தும் கட்டணங்களாக வசூலிக்கும்.

(நடவடிக்கை வரம்புகள்).ஒரு குறிப்பிட்ட காலக் கட்டத்தில் அனுமதிக்கப்படும் நடவடிக்கை எண்ணிக்கை மற்றும் தொகை வரம்புகளாக ('நடவடிக்கை வரம்புகள்') விற்பனை செய்யப்படும் இடங்களில் இபிக்ஸ்கேஷ், எச்டிஎஃப்சி பேங்க் மற்றும் / அல்லது வியாபாரிகள் கட்டுப்பாடுகளை விதிக்கலாம். எப்பொழுது வேண்டுமானாலும் இபிக்ஸ்கேஷ் / எச்டிஎஃப்சி வங்கி நடவடிக்கை வரம்புகளை எந்த ஒரு காரணத்திற்காகவும் திருத்த முடியும். இது போன்ற மாற்றங்களைத் தெரிந்து கொள்ள கார்டு வைத்திருப்பவர் Ebixcash.com இணையதளத்தில் ஆன்லைனில் பார்க்க முடியும் அல்லது வாடிக்கையாளர் சேவை மையத்துடன் தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம். பொருந்தும் சட்ட விதிகளுக்கு இணங்கி கார்டு வைத்திருப்பவருக்கு தகவல் தெரிவிக்கப்படும்.

**2. கெடு முடிதல், ரத்து செய்தல் மற்றும் முடித்தல்**

உங்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் கார்டு வழங்கப்பட்ட தேதியிலிருந்து (5) ஐந்து வருடங்களுக்கு செல்லுபடியாகும். கார்டில் குறிக்கப்பட்டிருக்கும் கெடு தேதியில் கார்டு பயன்பாடு முடிவுக்கு வந்துவிடும். கீழேயுள்ள நிலைமைகளில் இபிக்ஸ்கேஷ் / எச்டிஎஃப்சி பேங்க் உடனே கார்டை ரத்து செய்யலாம் அல்லது பயன்பாட்டை தற்காலிகமாக நிறுத்தி வைக்கலாம்: (1) கார்டு வைத்திருப்பவர் தன் கார்டு காணாமல் போய்விட்டதாகத் தெரிவிக்கும் போது. (2) தொடர்ந்தார்போல் 90 நாட்களுக்கு ஒருவேளை கார்டு பயன்படுத்தப்படாமல் இருக்கும் போது (3) 90 நாட்கள் வரையில் கார்டில் இறுப்பு இல்லாத நிலைமையில் (4) கார்டு வைத்திருப்பவர் வரையறைகள் மற்றும் நிபந்தனைகளை மீறி நடந்து கொள்ளும் போது (5) கார்பொரேட்டிலிருந்து கார்டை இரத்து செய்ய குறிப்பிட்ட கோரிக்கை எழும் போது அல்லது (6) கார்டை இரத்து செய்ய அல்லது தற்காலிகமாக நிறுத்தி வைக்கும் பொருட்டு பேமென்டுகளைச் சரிபார்க்கும் போது, அல்லது (7) சட்ட விதிகள் அல்லது ஒழுங்குமுறை நடவடிக்கை நிர்பந்தங்கள் காரணமாக மட்டுமே அல்லாமல் வங்கியின் நியாயமான கட்டுப்பாடுகளையும் கடந்து கார்டு சம்பந்தப்பட்ட பேமென்டுகளைப் பரிசீலிக்க இயலாத போது அல்லது பரிசீலிப்பது தடுக்கப்படும் போது.

**3. கார்டு இறுப்பு**

(கார்டு இறுப்பு) வரையறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்கி முறையான காரணங்களுக்காக கார்டு வைத்திருப்பவர் கார்டு இறுப்புத் தொகையைப் பயன்படுத்திக் கொள்ளலாம். கார்டு வைத்திருப்பவருக்கு வட்டி எதுவும் வழங்கப்பட மாட்டாது. பொருந்தும் கட்டணங்கள் உள்ளிட்டு தேவைப்படும் அளவில் கொள்முதல் / சேவைகளைப் பெற கார்டு வைத்திருப்பவர் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும், இல்லாவிட்டால் இந்த நடவடிக்கைக்கான தொலை செலுத்துதல் மறுக்கப்படலாம்.

(ஒழுங்குமுறை பிசகுகள்) வர்த்தருடன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட 07 தினங்களுக்குள் நடவடிக்கை விபரங்களில் ஏதேனும் ஒழுங்குமுறை பிசகுகள் அல்லது தவறுகள் தெரிய வந்தால் வாடிக்கையாளர் இபிக்ஸ்கேஷ் அமைப்பிற்கு தெரிவித்துவிட வேண்டும். இது சம்பந்தமாக தகவல் எதுவும் கிடைத்திருக்காத போது, நடவடிக்கை முறையாக நடந்திருப்பதாக இபிக்ஸ்கேஷ் கருதும்.

**4. கட்டணங்களும் பொருந்தும் வரிகளும்**

இபிக்ஸ்கேஷ் / எச்டிஎஃப்சி பேங்கிற்குச் செலுத்த வேண்டிய செலவினங்கள் மற்றும் கட்டணங்களை இபிக்ஸ்கேஷ் / எச்டிஎஃப்சி வங்கி கார்டு இறுப்பிலிருந்து கழித்துக் கொள்ளும்.

**5. இபிக்ஸ்கேஷ் / எச்டிஎஃப்சி வங்கி பொறுப்பு**

எந்த ஒரு நேரத்திலும் கார்டு கணக்கில் இறுப்பிலிருக்கும் தொகை அளவில் மட்டுமே இபிக்ஸ்கேஷ்/ எச்டிஎஃப்சி வங்கி பொறுப்புகள் கட்டுப்படுத்தப்பட்டிருக்கும்.

**6. தரவு பாதுகாப்பு**

வாடிக்கையாளரின் குறிப்புகளை அனுசரித்து கார்டு வழங்குதல், கார்டைப் பராமரித்தல், கார்டு சம்பந்தப்பட்ட அல்லது அதன் பயன்பாடு குறித்து வாடிக்கையாளர் கேட்கும் கேள்விகளைக் கையாளும் போது, புள்ளி விபர கணக்குகளில் மற்றும் ஒழுங்குமுறை அதிகாரங்களுக்கு தகவல் தெரிவித்தல் மற்றும் மோசடி தவிர்த்தல் நடவடிக்கைகளில் இபிக்ஸ்கேஷ் / எச்டிஎஃப்சி வங்கி வாடிக்கையாளரின் சொந்த தரவுகளைக் கையாளும்.

இபிக்ஸ்கேஷ் / எச்டிஎஃப்சி பேங்க் பொருந்தும் தரவு பாதுகாப்பு மற்றும் வங்கி நடவடிக்கை இரகசியத்தன்மைச் சட்ட விதிகளுக்கு உட்பட்டு, அவை அனுமதிக்கும் அளவிலேயே கார்டு வைத்திருப்பவரின் தரவுகளை வேறு நிறுவனங்களுக்கு மற்றும் விண்ணப்பப்படிவம் பரிசீலித்தல், மோசடி நடவடிக்கை கண்காணிப்பு, வாடிக்கையாளர் சேவை, கார்டு தயாரித்தல் மற்றும் தொழில்நுட்ப சேவைகள் வழங்கும் நிறுவனங்களுக்கும் அவர்களுடைய ஒவ்வொரு முகவர்களுக்கும், துணை ஒப்பந்தக்காரர்களுக்கும், கார்டு வைத்திருப்பவர் மற்றும் கார்டு சம்பந்தப்பட்ட தகவல்களை வழங்கும்.

இபிக்ஸ்கேஷ்/எச்டிஎஃப்சி பேங்க் இவர்களுக்கு வாடிக்கையாளரின் சொந்த தரவுகளை வெளியிடலாம்: (1) வாடிக்கையாளர், (2) தவறான அல்லது உண்மையல்லாத தரவுகள் கொடுக்கப்பட்டு மோசடி நடந்திருப்பது தெரிய வரும் போது மோசடி தடுப்பு முகமைகளுக்கு, (3) நீதிமன்ற கட்டளைப் படி அல்லது பொருந்தும் சட்ட விதிகள் படி சட்ட ரீதியான / ஒழுங்குமுறை அதிகாரங்கள், சட்டச் செயலுறுத்தம் அல்லது மோசடி தடுப்பு முகமைகளுக்குக் கொடுக்க வேண்டியிருத்தல். உயர்தர சேவை அளிப்பு, பாதுகாப்பு, தகவல் சேகரிப்பு, பயிற்சி அளிப்பு அல்லது பொருந்தும் விதிகளில் படி இபிக்ஸ்கேஷ் / எச்டிஎஃப்சி தொலை பேசி அழைப்புகளைப் பதிவு செய்யும் மற்றும் / அல்லது கண்காணிக்கும். அனைத்து பதிவுகளுக் இபிக்ஸ்கேஷ் / எச்டிஎஃப்சி பேங்கிற்குச் சொந்தமாக இருக்கும். மேலே சொல்லப்பட்டிருக்கும் நோக்கங்களுக்காக, இபிக்ஸ்கேஷ் / எச்டிஎஃப்சி பேங்க் மற்றும் மேலே சொல்லப்பட்டிருக்கும் நபர்கள்/அமைப்புகள் கார்டு வைத்திருப்பவருடைய சொந்த தரவுகளைப் பரிசீலிக்கும் (வேறு இடங்களுக்கு அனுப்பி வைக்கும்) என்பதற்கு கார்டு வைத்திருப்பவர் சம்மதம் அளிக்கிறார்.

**7. பல்வகையானவை**

(திருத்தங்கள்) இபிக்ஸ்கேஷ் / எச்டிஎஃப்சி பேங்க், வாடிக்கையாளருக்கு அறிவிக்காமல், எந்த நேரத்திலும் சட்ட விதிகளுக்கு உட்பட்டு, இதன் விதிகளை, கட்டணங்களை மாற்றலாம், நீக்கலாம், சேர்க்கலாம் அல்லது மாற்றலாம் (அதிகரித்தல் குறைத்தல் உட்பட). www.ebixcash.com இணையதளத்தில் வெளியிடப்பட்ட 24 மணி நேரத்திற்குப் பிறகு கார்டு வைத்திருப்பவர் இம் மாற்றங்களைப் பார்த்து ஏற்றுக்கொண்டிருக்கிறார் என்று கருதப்படும். இபிக்ஸ்கேஷ் / எச்டிஎஃப்சி எந்த ஒரு நிபந்தையையும் திருத்தும் உரிமையைப் பெற்றிருக்கும்.

(ஆளுகை சட்டம்) இந்த வரையறைகளும் நிபந்தனைகளும், இதிலிருந்து உருவாகும் அனைத்து விசயங்களும் இந்தியச் சட்டங்கள் ஆளுகைக்கு உட்பட்டிருக்கும், கார்டு வைத்திருப்பவர் மற்றும் இபிக்ஸ்கேஷ் / எச்டிஎஃப்சி பேங்க் இதன் பொருட்டு மும்பை நீதிமன்ற அதிகார எல்லையில் அவற்றைத் தீர்த்துக்கொள்ள வேண்டும்.

**8. ஹெல்ப் லைன்**

எங்கள் வாடிக்கையாளர் கவனிப்பு தொலைபேசி எண்ணில் 7666155220 தொடர்பு கொள்ளுங்கள் அல்லது care@ebixcash.comமின்னஞ்சல் முகவரியில் எழுதுங்கள் அல்லது கீழேயுள்ள முகவரிக்கு அஞ்சல் அனுப்புங்கள் : இட்ஸ் கேஷ் கார்டு லிமிடெட், டாப் 14வது தளம், டைம்ஸ் டவர், கமலா சிட்டி, சேனாபதி பாபட் மார்க், லோயர் பரேல், மும்பை — 400013.